நெய்வேலி சட்டமன்றத் தொகுதி

# வடக்கு மேலூர் - பாச்சாரப்பாளையம் சாலை அகலப்படுத்தபடுமா?

## சட்டப்பேரவையில் சபா. இராஜேந்திரன் வினா!

சென்னை, ஜூன் 24 - சட்டப்பேரவையில் உறுப்பினர் சபா. இரா ஜேந்திரன் எழுப்பிய கேள்வியைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு: -

**சபா ராஜேந்திரன்:** நெய்வேலி தொகுதி, வடக்கு மேலுர் பாச்சாரப் பாளையம் சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

**அமைச்சர் எ.வ. வேலு:** நெய்வேலி தொகுதி வடக்கு மேலூர் கீழார் பாச்சாரப்பாளையம் சாலை சுமார் 9 கிலோ மீட்டர் நீளம் உடையது. இதிலே 8 கிலோ மீட்டர் சாலை முன்னரே இடைவெளித் தளமாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 கிலோ மீட்டர் சாலை இடைவெளி அகலப்படுத்துவதற்காக CRIDP-ல் 20242025 திட்டத்தின்கீழ் 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**சபா. இராசேந்திரன்:** அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. இந்தச் சாலையை அகலப்படுத்த ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தப் பகுதியில் கிலோ மீட்டர் 6/6 அந்த இடத்தில் ஒரு பழைய CULVERT பாலம் பழுதடைந்துள்ளது. குறுகிய பாலம் அது. அதைச் சரிசெய்கின்ற வகையில் புதிய CULVERT பாலத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அதே போல இந்தப் பகுதியில் உள்ள குறிஞ்சிப்பாடி உட்கோட்டத்தில் உள்ள பேய்க் காநத்தம் கிராமத்தில் தரைப் பாலத்தை மேம்பாலமாக தரமுயர்த்திக் கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும் முதலமைச்சர் அவர்களின் அற்புதமான திட்டமான "நான் முதல்வன் திட்டத்தில்" என்னுடைய நெய்வேலி தொகுதியிலுள்ள காட்டுக்கூடலூரி லிருந்து குள்ளஞ்சா வடிக்குச் செல்கின்ற அந்த MDR சாலையை, மாநில நெடுஞ்சாலையாக (SH) தரமுயத்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். உரிய கருத்துருக்களை அரசு அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை மாநில நெடுஞ்சாலையாக தரமுயர்த்தி உரிய நிதியினை ஒதுக்கி, உடனடியாக அதைச் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் கோரப்பட்ட கோரிக்கை என்பது குள்ளஞ்சாவடியிலிருந்து, காட்டுக்கூடலூர் வழியாக விருதாசலம் செல்லும் இரண்டு மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் ஒரு மாவட்ட இதர சாலையை இணைக்கிற 39 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலையாகத் தர முயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது பரிசீலனையில் இன்றைக்கு இருக்கிறது. விரைவிலேயே தரமுயர்த்தி அரசாணை வழங்கப்ப டும். அதோடு மட்டுமல்ல, உறுப்பினர் அவர்கள் தரைப் பாலம் சிலந்திநத்திபுரம் சாலையிலே அமைந்திருக்கிற அந்தத் தரைப் பாலத்தை உயர் மட்டப் பாலமாக அமைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு முதல மைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே தமிழ்நாட்டிலே 1,113 தரைப் பாலங்களை எடுத்துக் கொண்டு அதற்காக திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டு பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அந்த வகையிலே இந்த ஆண்டு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற அந்த தரைப்பாலத்திற்கு 2 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்த நிதியா ண்டிலேயே நிதியொதுக்கப்ப ட்டு அந்தப் பாலம் அவசியம் கட்டித் தரப்படும்.

**சபா. இராசேந்திரன்:** மீண்டும் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது நெய்வேலி தொகுதி வழியாகச் செல்கின்ற விக்கிரவாண்டி கும்பகோணம்தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலை பல காலமாக அங்கு வேலைகள் நடைபெறாமல் இருக்கிறது.

2005வது ஆண்டில் அது தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டு TENDER விடப்பட்டது. இந்த சாலையில் 63 கிலோ மீட்டர் பரவனாற்று பாலம், அதேபோல, 52 கிலோ மீட்டர் கண்ணுத்தோப்பு பாலம், 48 கிலோ மீட்டர் நெய்வேலி ARCH GATE பகுதி 13 விக்கிரவாண்டி தொகுதி இடங்கள் BLACK SPOTகளாக அறிவிக்கப்பட்டு தொடர்ந்து அங்கே விபத்துகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பகுதிகளிலாவது அந்தப் பாலங்களை உடனடியாக கட்டி முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அரசு நியமித்துள்ள CONSULTANT அவர்களுக்கும் NHAI-க்கும் சரியான ஒருங்கிணைப்பு இல்லையென்று சொல்கிறார்கள். எனவே, இது தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும், அமைச்சர் அவர்களிடம் 2, 3 முறை கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறோம். எல்லாம் செய்தும்கூட தொடர்ந்து பணிகள் நடைபெறாமல் பெரிதும் மக்கள் அந்தப் பகுதியிலே பாதிக்கப்படுகிறார்கள். அதை கவனத்திலே எடுத்துக்கொணிடு தொடர்ந்து அந்த வேலைகள் மறுபடியும் நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.



**அமைச்சர் எ.வ. வேலு:** விக்கிரவாண்டி கும்பகோணம் தஞ்சாவூர் என்பது தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலை. இதை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலமாகத்தான் இந்தப் பணி 3 கட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதல் பகுதியாக விக்கிரவாண்டி முதல் சேத்தியாதோப்பு வரை சாலைப் பணிகள் மேற்கொள்ள ரிலையன்ஸ் நிறுவனம்

2018ல் ஓர் ஒப்பந்தம் கோரப்பட்டு அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டது. சாலைப் பணிகள் நடைபெற்ற அந்த நிலையிலே ஒப்பந்ததாரர் மிக மிக தாமதமாக அந்த பணிகளை அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். அதேபோன்று இந்தப் பணிகள் விரைந்து செயல்பட வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இதே கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோன்று, நம்முடைய பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன் இதுகுறித்து தொடர்ந்து சட்டமன்றத்திலே பேசுகிறபோதும் சொன்னார்கள். நேரிலும் என்னிடத்தில் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களும், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தொடர்ந்து இது குறித்து வலியுறுத்திக் கொண்டே இருந்தார்கள். இதுசம்பந்தமாக நேரில் துறையினுடைய செயலாளரை அழைத்துக் கொண்டு டெல்லியிலே 2 முறை மாண்புமிகு நிதின் கட்கரி அவர்களைச் சந்தித்து தனியாகவே கடிதம் கொடுத்தோம். ஏனென்றால், நீண்ட காலமாகவே சாலைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கு விபத்துகள் ஏற்படுகின்றன என்று சொன்னதன் அடிப்படையிலே, அவர்கள் அந்த கம்பெனியை அழைத்து, நீங்கள் மிகவும் தாமதமாக பணிகளைச் செய்கிறீர்கள் என்று TERMINATION NOTICE கொடுத்தார்கள். அவ்வாறு வலியுறுத்தியதன் அடிப்படையிலே, 2024-2025க்குள் TERMINATION செய்த அந்த PERIOD முடி கிறது. அதற்குப்பிறகுதான் அவர்கள் புதிய ஒப்பந்ததாரர்களை அழைக்க முடியும். எனவே, மீண்டும் புதிய ஒப்பந்ததாரர்களை அழைத்துப் பேசி, TENDER விட்டால்தான் அந்தப் பணிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், இதன் இரண்டாவது பகுதியாக சேத்தியாதோப்பு முதல் சோழவரம் வரை 2016ல் பட்டேல் என்கிற அந்த நிறுவனம் 50 கிலோ மீட்டர் தூரத்தில் 42.5 கிலோ மீட்டர் பணிகள் இப்போது முடிவுற்று விட்டது. மூன்றாவது பகுதியாக சோழவரம்-தஞ்சாவூர் வரை பட்டேல் என்கிற அந்த நிறுவனமே 2017ல் துவக்கப்பட்டு 48 கிலோ மீட்டரில் 44 கிலோ மீட்டர் பணிகள் முடிந்துவி ட்டன. இன்னும் 2 மாத காலத்திலே இந்த 2 பகுதி பணிகளையும் முடித்துத் தருவதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், அதையும் நாங்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம். இந்த முதல் கட்டம் என்பது மீண்டும் இன்னொரு கம்பெனிக்கு TENDER விடப்பட்டு, அதற்குப் பிறகுதான் பணிகள் துவங்கப்படும். டெல்லிக்குப் போகிறபோது மீண்டும் இதுகுறித்து, விரைவிலே செய்து தர வேண்டி அவர்களிடம் வலியுறுத்தி, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

போக்குவரத்து நெரிசலைக் குறைக்க

# முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் பல நகரங்களில் புறவழிச்சாலைகள்!

## சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் கேள்விக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பதில்!

சென்னை, ஜூன் 24- போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் பல நகரங்களில் புறவழிச்சாலைகள் அமைக்கப்படுகின்றன என்று சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**பி.அய்யப்பன்:** உசிலம்பட்டி நகராட்சிப் பகுதி இருவழிச் சாலையாக இருக்கிறது. உசிலம்பட்டியில் அந்த இருவழிச் சாலை பகுதியில் ஏறக்குறைய 20, 25 திருமண மண்டபங்கள் MAIN ROADலேயே இருக்கின்றன. எனவே, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவேண்டும் என்பதற்காக, புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே, நகரப் பகுதிகளில் நெரிசல் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினால், புறவழிச் சாலை அமைக்க வேண்டு மென்று, அதற்காக பல நகரங்களில் நாங்கள் அமைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு, அவர் கேட்ட கேள்வியை எடுத்துக் கொண்டு, அங்கு புறவழிச் சாலை அமைப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறதா என்று முடிவு செய்யப்பட்டு, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அந்தப் பணிகளை எடுத்துக் கொள்வதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.



**சி.வி.எம்.பி. எழிலரசன்:** காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய கீழம்பிசெவிலிமேடு என்ற புறவழிச் சாலை ஏற்கெனவே கழக ஆட்சியி ன்போதுதான் புறவழிச் சாலையாக அமைக்கப்பட்டது. அதனை நான்கு வழிச் சாலையாக அமைத்துத் தரவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு உணர்ந்திருக்கக்கூடிய சாலை அது. எனவே, அதை அமைக்க முன்வருவாரா என்று கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் புதிதாக ஒரு திட்டத்தை நிறைவேற்றினார்கள். அதாவது, முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்கிற ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டு, இந்த 3 ஆண்டு காலமாக இரண்டுவழிச் சாலைகளை யெல்லாம் நான்கு வழிச் சாலைகளாக இந்த அரசு அமைத்துக் கொண்டிருக்கிறது. அவர் சொல்கிற புறவழிச் சாலை என்பது ஓர் அத்தியா வசியமான சாலை தான். ஏனென்றால், நகரத்தைப் பொறுத்தளவிற்கு, காஞ்சிபுரத்திலே நெரிசல் அதிகம். ஆகவே, புறவழிச் சாலை மூலமாகத்தான் செய்யாறுக்கே, நான் என்னுடைய மாவட்டத்திற்கே போக முடியும். அந்தச் சாலையைத் தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த ஆண்டே அந்தச் சாலையை எடுத்துக்கொள்வதற்காக திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்துகொண்டிருக்கிறோம். இந்த ஆண்டே அந்தச் சாலைப் பணியை நிறைவேற்றுவோம்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.





புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம் தெற்கு, வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திருமயம் அண்ணாசீரணி கலையரங்கத்தில் திருமயம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆறு.சிதம்பரம் தலைமையிலும், திருமயம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.கணேசன் வரவேற்புரையிலும் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் வழக்கறிஞர் சூர்யா வெற்றிக் கொண்டான், அ.சுப்பிரமணியன், சீனி.பழனியப்பன், தவ.பாஞ்சாலன், எம்.பி.சரவணன், இராம. மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, பாத்திமா பீவி, தேவி, சுப.துரைராஜா, முல்லை ரமேஷ், ஜான் பீட்டர் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.


